Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI
**Cr.M.P.No. 4481 /2023**

| | | | |
|---|---|---|---|
| Name | : **புஷ்பம்** | Father's Name/ Husband Name | : **சின்னக்காளை** |
| Village | : **கோவில்பட்டி** | Taluk | : |
| Religion | : | Age | : |
| Calling | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.09.2023

**நிருபண வாக்குமூலம்**

நான் மேற்சொன்ன முகவரில் குடியிருக்கிறேன் . எனக்கும் என் கணவர் சின்னக்காளைக்கும் கடந்த 16.03.2011 ம் தேதி திருமணம் நடைபெற்றது . சுமார் 3 வருடங்கள் எந்த பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்து வந்தோம். அதன்பின்பு நானும் என் கணவரும் சட்டப்படியான கணவன் மனைவியாக வாழ்ந்து வந்த நிலையில் என் கணவர் இந்திரா என்ற பெண்ணை 2 வதாக திருமணம் செய்துகொண்டார். இது சம்பந்தமாக நான் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் அனைவரும் என்னுடன் சமாதானம் பேசியதால் அந்த வழக்கு சமாதானமாக முடிக்கப்பட்டது . அப்போது என் கணவர் இனிமேல் எந்த தவறும் செய்யமாட்டேன் என்னுடன் இணைந்துவாழ சம்மதம் தெரிவித்து என்னை அழைத்து சென்றார் . தற்போது மீண்டும் ராணி என்ற பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார் . நான் திருமணத்தின்போது 11 பவுன் நகை என் பெற்றோர் கொடுத்து என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள் . அந்த நகைகளை என் கணவர் தொழில் செய்வதற்காக பெற்றுக்கொண்டார் . இன்று வரை அதை எனக்கு தரவில்லை . நானும் நம்பிக்கையின் பெயரில் என் கணவரிடம் கொடுத்தேன். ஆனால் அவர் என் நம்பிக்கையை பொய்யாக்கி அவருடைய சுயலாபத்திற்காக மாற்றிக்கொண்டார். எனக்கும் என் கணவருக்கும் குழந்தை இல்லை என்பதால் மாமனார் சிங்காரவேல் , மாமியார் ராமுத்தாய் , நாத்தனார் மகாலெட்சுமி , ஆகியோர் என்னை தொடர்ந்து துன்புறுத்தி வீட்டை விட்டு தொரத்திவிட்டார்கள் . நான்

என்னிடம் வாங்கிய நகையை கொடுங்கள் என்று கேட்டேன் . அதற்கு அவர்கள் என்னை கெட்டவார்த்தையால் திட்டி நகையை தரமுடியாது என்று சொல்லி வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள் . பிறகு நான் எனக்கு வேண்டிய ஊர்ப்பெரியவர்களிடம் முறையிட்டேன் .அவர்கள் நியாயம் கேட்டார்கள் . அப்போது எதிரிகள் 01.01.2023 ம் தேதிக்குள் நகையை கொடுத்துவிடுவதாக சொன்னார்கள் . அதன்படி நடந்துகொள்ளவில்லை. பின்பு நான் SP யிடம் புகார் கொடுத்தேன். அந்த மனு ஆண்டிபட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்டது . அங்கு வந்த எதிரிகள் 02.03.2023 ம் தேதிக்குள் என் நகையை கொடுப்பதாக கூறினார்கள் . ஆனால் அதன்படி நடந்துகொள்ளவில்லை. எனக்கும் என் கணவருக்கும் திருமணத்தின்போது என் பெற்றோர் எனக்கு கொடுத்த 11 பவுன் நகையை மோசடியாக எடுத்துக்கொண்டு என்னை ஆபாசமாக பேசி , துன்புறுத்தி, வீட்டை விட்டு வெளியேற்றிய எதிரிகள் நால்வர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.